பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
30 07 2024 **TUESDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூலம் கடந்த மூன்றாண்டுகளில் 15 கோடியே 54 லட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. தில்லியில் குடிமைப்பணி பயிற்சி மைய கட்டிடத்தின் கீழ்தளத்தில், தண்ணீர் சூழப்பட்டு மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விசாரிக்க குழு ஒன்றை உள்துறை அமைச்சகம் அமைத்துள்ளது.

3. சட்டவிரோத பணப்பரிவர்த்தனை வழக்கில் ஜார்க்கண்ட் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரனுக்கு அம்மாநில உயர்நீதிமன்றம் அளித்த ஜாமினை எதிர்த்து, அமலாக்கத்துறை தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

4. கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக, நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

5. இந்தியாவின் **Jiya Rai** உலகின் இளைய மற்றும் விரைவாக ஆங்கிலக் கால்வாயை கடந்த பெண் பாரா நீச்சல் வீராங்கனை என்ற பெருமையை பெற்றுள்ளார்.

>>>><<<<

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூலம் கடந்த மூன்றாண்டுகளில் 15 கோடியே 54 லட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜித்தன் ராம் மஞ்சி, கடந்த மூன்றாண்டுகளில் 3 கோடியே 86 லட்சம் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

அத்துடன், இரண்டு லட்சத்து 77 ஆயிரம் நிறுவனங்களுக்கு 8 ஆயிரத்து 793 கோடி ரூபாய் அளவிற்கு மானிய உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஜித்தன் ராம் மஞ்சி தெரிவித்துள்ளார்.

>>>><<<<

தில்லியில் குடிமைப்பணி பயிற்சி மைய கட்டிடத்தின் கீழ்தளத்தில், தண்ணீர் சூழப்பட்டு மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விசாரிக்க குழு ஒன்றை உள்துறை அமைச்சகம் அமைத்துள்ளது.

இக்குழு, சம்பவம் நிகழ்ந்ததற்கான காரணங்கள், தீர்வுகள் குறித்து தங்களது பரிந்துரைகளை அளிக்கவுள்ளது.

இக்குழுவில் உள்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர், தில்லி அரசின் உள்துறை முதன்மைச் செயலாளர், தில்லி காவல்துறை, தீயணைப்புத்துறை உயரதிகாரிகள் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழு 30 நாட்களுக்குள் தமது அறிக்கையை தாக்கல் செய்யும் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் நிவாரணத்தொகை வழங்கப்படும் என்று தில்லி துணைநிலை ஆளுநர் திரு. வினய்குமார் சக்சேனா அறிவித்துள்ளார்.

>>>><<<<

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை வழக்கில் ஜார்க்கண்ட் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரனுக்கு அம்மாநில உயர்நீதிமன்றம் அளித்த ஜாமினை எதிர்த்து, அமலாக்கத்துறை தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதுகுறித்த வழக்கை விசாரித்த நீதிபதி **B.R.** கவாய் தலைமையிலான அமர்வு, ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றம் திரு. ஹேமந்த் சோரனுக்கு அளித்த ஜாமின் உத்தரவில் தலையிட மறுத்துவிட்டது.

**>>>><<<<**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் சேர்ந்துள்ள புதிய சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1 கோடியை கடந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் திருமதி. **Shobha Karantlaje,** தமிழகத்தில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் புதிய சந்தாதாரர்களின் எண்ணிக்கை 11 லட்சத்து 91 ஆயிரமாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

**>>>><<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்திய தொழில் கூட்டமைப்பின் சார்பில் இன்று நடைபெறவுள்ள பட்ஜெட்டுக்கு பிந்தைய மாநாட்டின் தொடக்க அமர்வில் உரையாற்றவுள்ளார்.

புதுதில்லியில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் அரசின் முடிவுகள் குறித்தும், தொழில்துறையின் பங்களிப்பு குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

தொழில்துறை மற்றும் அரசு பிரதிநிதிகள், சிந்தனையாளர் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் பலர் காணொலி வாயிலாக இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

**>>>><<<<**

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகுகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தொகை 5 லட்சம் ரூபாயிலிருந்து 6 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள், முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேசினர்.

அப்போது, தங்களது கோரிக்கைகளை பரிசீலனை செய்து நிறைவேற்றித் தருமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதுகுறித்து, மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மீனவர் சங்க பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட நாட்டுப் படகுகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் ஒன்றரை லட்சம் ரூபாய், 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அதேபோல், இலங்கை சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தின உதவித்தொகை 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண, தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு, வெளியுறவு அமைச்சரை சந்தித்து முறையிடுமாறு முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**>>>><<<<**

சிங்கப்பூரில் பயணம் மேற்கொண்டுள்ள தமிழக வேளாண் துறை அமைச்சர் திரு. எம்ஆர்கே. பன்னீர்செல்வம் தலைமையிலான குழுவினர், அந்நாட்டில் உள்ள தேசிய பல்கலைக் கழகத்தின் தொழில் முனைவோர் மையத்தில் உள்ள செயற்கை நுண்ணறிவு மையத்தை பார்வையிட்டனர்.

வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகள் குறித்து அந்நாட்டு விஞ்ஞானிகளிடம் கேட்டறிந்தனர்.

தமிழ் மொழியில் வேளாண்மைக்கென செயற்கை நுண்ணறிவு இணையதளத்தை உருவாக்குவது குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

அப்போது கொய்மலர்களின் தரம் மற்றும் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு தேவையான நுணுக்கங்களையும் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேட்டறிந்தார்.

>>>><<<<

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக, நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சூரல்மலா என்ற இடத்தில் இன்று அதிகாலை ஏற்பட்ட நிலச்சரிவில் ஏராளமானோர் சிக்கியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முதல் தொடர்ந்து கனமழை பெய்ததால், சூரல்மலா நகரின் பல வீடுகள், வாகனங்கள், வர்த்தக பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து மழை பெய்து வருவதால், மீட்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

தேசிய பேரிடர் மீட்புப் படை, வனத்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள் நிலச்சரிவில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

400-க்கும் மேற்பட்டோர் இந்த நிலச்சரிவில் சிக்கியிருப்பதாகவும், மூன்று பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், நிலச்சரிவில் சிக்கியவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

பலத்த மழை காரணமாக சாலைகளில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தெரிவித்தனர்.

>>>><<<<

ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் செய்த கனமழையால் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால், சிம்லா – சண்டிகர் தேசிய நெடுஞ் சாலையில் தத்யார் என்ற இடத்தில் வாகனம் ஒன்று சிக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்., மூன்று பேர் காயமடைந்தனர்.

சிம்லாவை சுற்றியுள்ள பகுதிகளில் சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இனி வரும் காலங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு நாட்களுக்கு ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக, ஆறுகளின் அருகே செல்வதை தவிர்க்க வேண்டும் என்று அம்மாநில அரசு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

>>>><<<<

ஜார்க்கண்ட் மாநிலம், **Seraikella Kharsawan** மாவட்டத்தில் **Potobeda** என்ற இடத்தில் இன்று அதிகாலை மும்பை ஹவுரா ரயிலும், சரக்கு ரயிலும் சரக்கு ரயிலும் மோதி விபத்து ஏற்பட்டது.

உயிரிழப்பு குறித்த தகவல் ஏதும் இல்லை.

**>>>><<<<**

சீனாவின் **Hunan** மாகாணத்தின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள சுற்றுலா விடுதியில் மண் சரிவு ஏற்பட்டத்தில் 15 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர்.

அப்பகுதியில் பெய்த மழை காரணமாக, இந்த மண்சரிவு ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்கு சுமார் 30 சென்டிமீட்டர் அளவுக்கு மழை பெய்ததாக கூறப்படுகிறது.

**>>>><<<<**

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியில் இன்று நடைபெறவுள்ள 10 மீட்டர் கலப்புக் குழுப் பிரிவில் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் மனுபாக்கர் - **Sarabjot Singh** இணை, தென்கொரிய இணையை எதிர்கொள்கிறது.

படகுப் போட்டியின் காலிறுதியில் இந்தியாவின் பல்ராஜ் பன்வார் இன்று பங்கேற்கிறார்.

ஹாக்கி பிரிவில் இந்தியா – அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

**>>>><<<<**

இந்தியாவின் **Jiya Rai** உலகின் இளைய மற்றும் விரைவாக ஆங்கிலக் கால்வாயை கடந்த பெண் பாரா நீச்சல் வீராங்கனை என்ற பெருமையை பெற்றுள்ளார்.

16 வயதான அவர், இங்கிலாந்தின் **Abbots Cliff** பகுதியிலிருந்து, பிரான்ஸின் **Pointe de la Courte-Dune-**பகுதி வரையிலான 34 கிலோமீட்டர் தொலைவை 17 மணி 25 நிமிடங்களில் கடந்து, இந்த சாதனையை படைத்தார்.

**>>>><<<<**

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பல்லேகலே-வில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

**>>>><<<<**

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் முதலாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் திருப்பூர் அணி இன்று கோவை அணியை எதிர்கொள்கிறது.

**>>>>END<<<<**